சார்பு நீதிமன்றம், பொன்னேரி
ஓ.எஸ்.எண். 75 /2015
நாள் : 06/03/2020.

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | வா.த.சா.1. திரு.ஹரிராம் பொரானா |
| வயது | : | |
| த/பெ | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| சாதி | : | |
| விலாசம் | : | |

முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் முதலாம் வாதியாவேன். வழக்கு விவரங்கள் குறித்து நிருபண வாக்குமூலத்தின் வாயிலாக கூறியுள்ளேன். என்னுடைய வழக்கிற்கு ஆதரவாக கீழ்கண்ட ஆவணத்தை குறியீடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| 1. | 20.08.2014 | தேதியிட்ட வழக்கு சொத்தை நான்கிரையம் பெற்ற அசல் ஆவணத்தின் சான்றிட்ட நகல் | Ex.A1 |
| 2. | 13.03.2015 | தேதி அன்று என்னுடைய வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பின் நகல் | Ex.A2 |
| 3. | 16.03.2015 | அன்று பிரதிவாதி அந்த அறிவிப்பினை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை | Ex.A3 |
| 4. | 01.03.2015 | அன்று பிரதிவாதியால் என்மீதும் இதர வாதிகள் மீதும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எண். 44/2015ன் எங்களுக்கு அனுப்பப்பட்ட தாவாவின் நகல் | Ex.A4 |

வாதசாஆ 1 ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. எனவே தாவாவில் கோரியபடி தீர்ப்பாக வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

சார்பு நீதிபதி, பொன்னேரி.